வாக்குமூலம்

உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 236/2021

வழக்குசாட்சி LW2/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அஸ்லாம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | அப்துல் சலீம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 39 |

தேதி 04.03.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் வேப்பம்பட்டு திருவள்ளூர் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் எனது அப்பா. அவருக்கு தற்போது உடல்நிலை சரியில்லாமல் கோயமுத்தூரில் வசித்து வருகிறார். அவரால் வர இயலாது. 2015ம் ஆண்டு 6ம் தேதி 9வது மாதம் எனது தம்பியின் திருமணத்திற்கு ஆந்திரா சென்றிருந்தோம். இரவு திரும்பி வந்த போது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு வீடு பொருட்கள் முழுவதும் கலைக்கப்பட்டு 13 சவரன் நகைகள் காணாமல் போயிருந்தது. உடனடியாக எனது அப்பா பால்பண்ணை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ஒரு வருடம் கழித்து 5 சவரன் நகைகளை திருப்பி கொடுத்தனர். திருவொற்றியூர் நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்டோம். யார் திருடினார்கள் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அப்பா கூறிதான் எனக்கு சம்பவம் தெரியும் என்றால் ஆமாம். நான் எனது அப்பாவுடன் தான் இருக்கிறேன். நான் புகாரில் நகையின் வடிவமைப்பு, பணத்தின் எண்ணிக்கையினை குறிப்பிட்டு கூறவில்லை

என்றால் ஆமாம். கைரேகை போலீசார் எடுத்தார்களா என்றால் ஆமாம். கதவு பூட்டினை எடுத்துச் சென்றார்களா என்றால் ஆமாம். சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும் எனது அப்பாவிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்குச் சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.